செ.கு. எண் : 113. நாள் : 05/02/2012.

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், தன்னைத் தேர்ந்தெடுத்த ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு, ஸ்ரீரங்கம் தொகுதி முழுவதும் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டதோடு, 19.6.2011 அன்று ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, பக்தர்களுக்கான தங்கும் வசதி, புதிய துணை மின்நிலையங்கள், புதிய மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி உட்பட 190 கோடி ரூபாய்க்கும் மேலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வைத்து, அரசின் பல்வேறு நலத்த திட்ட உதவிகளை ஏழை, எளிய பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும், ஏழை, எளிய மக்களுக்கு அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கவும், 13.2.2012 அன்று ஸ்ரீரங்கம் சென்று, அங்கு நடைபெறவிருக்கும் அரசு விழாவில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நாள் : 5.2.2012